**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)

அமர்வு வழக்கு எண். 192/2021

நாள்: 24.09.2025

அரசு தரப்பு சாட்சி: 7

சாட்சி விசாரணையை காணொளி மூலம் நடத்துவதற்கு அரசு தரப்பில் மனு தாக்கல் செய்து எதிரிகள் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் சாட்சி காணொளி மூலம் வரவழைக்கப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞரும் உள்ளார். சாட்சி City Civil Court, Chennai–ல் உள்ள காணொளி அரங்கத்தில் அமர வைக்கப்பட்டு சாட்சி காணொளி மூலம் நீதிமன்றத்திலுள்ள திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சியின் அருகில் காணொளி மூலம் விசாரணை செய்வதற்கு உதவியாக **Assistant Programmer திருமதி.விசாலாட்சி,** City Civil Court, Chennai என்பவர் உள்ளார். சாட்சி கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம் Grade–I Bench Clerk **திருமதி. M.ஜானகி** என்பவர் மூலம் பிரமாணம் செய்யப்பட்டார். சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு சாட்சியின் அடையாளமும் உறுதிப்படுத்தப்பட்டபின் விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய காவல் ஆய்வாளர் திரு. லெட்சுமி நாராயணன், Scientific Officer, Forensic Sciences என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 10–ன் படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.09.24 16:47:19 +0530

| | | |
|---|---|---|
| Name | : | லெட்சுமி நாராயணன் |
| Father Name | : | ஆதிமூலம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | அறிவியல் அலுவலர் |
| Religion | : | |
| Age | : | 38 |

**(எதிரிகள் ஆஜர்)**

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது அறிவியல் அலுவலராக சென்னை தடய அறிவியல் துறையில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். மாண்புமிகு மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம் அவர்களின் கடித எண்.434 நாள் 03.09.2020 ம் தேதியிட்ட கடிதத்துடன் மண்டபம் காவல் நிலைய குற்ற எண்.187/2019 வழக்கில் தொடர்புடைய மூடி முத்திரையிடப்பட்ட காகித பொட்டலம் மற்றும் முத்திரையிடப்பட்ட மரப்பெட்டகம் திரு. மன்சூர்அலி காவலர்எண். 2036 என்பவர் மூலம் கடந்த 09.09.2020 அன்று இயற்பியல் எண்.104/2020 என ஆய்வுக்கு பெறப்பட்டது. மேற்கண்ட முத்திரையிடப்பட்ட ஒரு காகித பொட்டலத்தில் அயிட்டம் 1 முதல் 66 வரையிலான வரிசை எண். 4BL 690707 என்ற ஒரே எண் கொண்ட ரூ500 நோட்டுகளும் அயிட்டம் 67 முதல் 132 வரையிலான வரிசை எண். 1AS 389705 என்ற வரிசையில் 66 எண்கள் கொண்ட ரூ.500 மதிப்பிலான நோட்டுகளும் அயிட்டம் 133 முதல் 201 வரையிலான 3 BL 789512 என்ற எண் கொண்ட 69 எண்ணிக்கையிலான ரூ.500 மதிப்பிலான நோட்டுகளும் முறையே தனித்தனியாக முத்திரையிடப்பட்ட காகித முறையில் பி.ஆர்.எண்.106/2020 Cr.No. 187/2019 Mandapam P.S., என குறிக்கப்பட்டு பெறப்பட்டது. மேலும் முத்திரையிடப்பட்ட மரப்பெட்டகத்தில் ஒரு நீலம் / கருப்பு HP inkjet Printer அயிட்டம் 202 ஆக ஒரு முத்திரையிடப்பட்ட காகித பெட்டகத்தில் அயிட்டம் எண்.5, என குறியிடப்பட்டு பெறப்பட்டது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.09.24 16:47:27 +0530

அயிட்டம் 1 முதல் 201 வரையிலான 500 ரூபாய் நோட்டுக்கள், 9KM 635221 என்ற எண் கொண்ட 500 ரூபாய் உண்மையான நோட்டுடன் Stereo Microscope மூலம் மற்றும் HRVSE ( High Resolution Video Spectral Comparator) என்ற கருவியின் மூலம் ஒப்புமை ஆய்வு செய்யப்பட்டது. அவ்வாறு செய்யப்பட்டதில் Water mark, Security Thread, UV Flourescence, Colour Shifting property ஆகிய பாதுகாப்பு அம்சங்கள் இல்லாமலும், Latent Denomination, Braille point/Angular Bleed lines ஆகியவற்றில் raised effect இல்லாமலும் காணப்பட்டது. மேலும் மேற்கண்ட நோட்டுகள் அனைத்தும் Inkjet Printer மூலம் அச்சடிக்கப்பட்டுள்ளது. அயிட்டம் எண்.202 என குறியிடப்பட்ட Inkjet Printer தொழில்நுட்ப குறைப்பாட்டினால் மாதிரி Print எடுக்க இயலாமையால் ஒப்புமை ஆய்வு மேற்கொள்ள இயலவில்லை. எங்களது ஆய்வில் முடிவின்படி, அயிட்டம் 1 முதல் 201 வரையிலான 500 ரூபாய் மதிப்பிலான நோட்டுக்கள் போலியான இந்திய ரூபாய் நோட்டுக்கள் எனவும் மேற்கண்ட நோட்டுக்கள் இரு தாள்கள் ஒட்டப்பட்டு காணப்படுவதால் அவைகள் தனித்தனியாக அச்சிடப்பட்டு பின்பு ஒட்டப்பட்டவையாக இருப்பதால் அவை அச்சடிக்கப்பட்ட முறையில் உண்மையான நோட்டுக்கள் அச்சடிக்கும் முறையிலிருந்து வேறுப்பட்டுள்ளது. மேற்கண்ட போலியான 500 ரூபாய் மதிப்பிலான நோட்டுக்கள் Inkjet Printer மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதால் அயிட்டம் 202 ஐ பயன்படுத்தி தயார் செய்திருக்கலாம் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆய்வறிக்கை துணை இயக்குநர் திருமதி.எம்.ஹேமலதா அவர்களின் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டு இருவராலும் கையொப்பமிடப்பட்டு அதன் அறிக்கை சீல் இடப்பட்ட தபால் மூலம் இராமேஸ்வரம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவருக்கு காவலர் 1805 திரு.பிரபாகரன் மூலம் 01.07.2021 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. அந்த ஆய்வறிக்கை அ.சா.ஆ.7. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

ஆய்வுக்கு அனுப்பப்பட்ட பிரிண்டர் எந்த வகை மாடல் என குறிப்பிட்டு ஆய்வுக்கு அனுப்பபடவில்லை என்றால் சரிதான். எல்லா வகையான பிரிண்டர்களிலும் ஒரே வகையான பிரிண்டுக்கள் எடுக்கமுடியாது என்றால் சரிதான். ஆய்வுக்கு அனுப்பப்படும் போது பிரிண்டர் செயல்படாத நிலையில் தான் இருந்தது என்றால் ஆய்வு செய்யும் போது செயல்படவில்லை. ஒவ்வொரு பிரிண்டருக்கும் Internal

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2025.09.24 16:47:37 +0530

Memory இருக்கும் என்றால் தவறு. Internal Memory இருக்கும் என்றும் நான் வழக்கிற்காக இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. Internal Memory ஐ ஆய்வு செய்தால் எத்தனை நகல்கள் எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியும் என்றால் தவறு. பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட பிரிண்டரை சரிசெய்து பிரிண்ட் எடுத்திருந்தால் அந்த என்ன வகையான பிரிண்ட் என்பதை தெரிந்து கொண்டிருக்க முடியும் என்றால் ஆய்வகத்தில் அவ்வகையான வசதிகள் கிடையாது. ஆய்வுக்கு பிரிண்ட் செய்யப்படாத தாள்கள் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. வழக்கின் சரித்திரம் வேண்டுகோள் கடிதத்துடன் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. பயனற்ற ஒரு பிரிண்டரை தான் ஆய்வாளர் நீதிமன்றம் மூலம் அனுப்பினார் என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| | | |
|---|---|---|
| Tmt.Visalatchi,<br>Assistant Programmer,<br>City Civil Court,<br>Chennai.<br>Coordinator<br>Remote site | Deponent | Tmt.A.Janaki, Gr-I, Bench Clerk,<br>Additional District Court,<br>Ramanathapuram.<br>Coordinator Court site |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.09.24 16:47:49 +0530